முற்பகல் 10–55

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

சென்னை, கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம், C.M.D.A. நிபந்தனைகளை மீறி தனியார் கட்டுமான நிறுவனம் முறைகேடாகப் பயன்படுத்தி வருவது—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. *நான்* demand–*க்குப் போயாகிவிட்டது. (குறுக்கீடுகள்) என்ன இது? (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதை நான் புரிந்துகொண்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதை நான் புரிந்துகொண்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பரிதி இளம்வழுதி அவர்கள் பத்திரிகையில் வந்த செய்தியைத்தான் அப்படிச் சொல்லி இருக்கிறார்கள் என்று நாங்கள் எண்ணுகிறோம். (குறுக்கீடுகள்) ஒருவேளை தாங்கள் கூறுவது போல அப்படிப்பட்ட சொல் இருந்தால் தயவுகூர்ந்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம் என்று நான் அவைத் தலைவரை உங்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் தீர்ப்பின்மீது எந்தக் கருத்தும் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் ஒரு திருத்தம். ** வேப்பெண்ணெய் வடிந்திருக்கிறது. வேப்பெண்ணெய் வடிந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கே.பி. அன்பழகன். (குறுக்கீடுகள்) அடிக்கடி எழுந்திருந்து நிற்காதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வேறு சப்ஜெக்டிற்குப் போயாகிவிட்டது. நீங்கள்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2010 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

நீக்கச் சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. இன்னும் என்ன வேண்டும்? (குறுக்கீடுகள்)

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம், நீங்கள் சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதற்குப் பிறகும் நீங்கள் எழுந்திருந்து நின்றால் அது முறை இல்லை, உட்காருங்கள்.

4. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.அன்பழகன். ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் வேகத்தையும், பேரறிஞர் அண்ணாவின் அறிவையும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தாய் உள்ளத்தையும் ஒருங்கே பெற்று, ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்கி, எனது உரையைத் துவங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற